ரிஜிஸ்டர் நெ. M. 4870. ஆண்டு கட்டணம் ரூ. 4—8—0 தனிப்பிரதி 0—1—3

திராவிடன்

தமிழ் வார வெளியீடு. ஆசிரியர்: N.V. நடராசன்.

மாலை 1 சென்னை 30—11—1947 ஞாயிறு மலர் 16

அழிய வேண்டும்

குடியினைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு போலப்
படிவுடன் வந்து சேர்ந்து பக்குவ மாகக் கூடித்
திடமுடன் சூழ்ச்சி செய்து தென்றமிழ்க் குலத்தை
[வீழ்த்தி
அடிமைகொண் டுயர்ந்து வாழும் ஆரியம் அழிய
[வேண்டும்!

ஒருவனே தேவ னென்றும் ஒன்றுதான் குலமு மென்
[றம்
மருவிய காதல் வாழ்வே வாழ்வினில் வாழ்வ தென்றும்
பெருமையோ டுயர்ந்து வாழ்ந்து பெருகிய தமிழ்ப்பண்
[பெல்லாம்
அருகியே யொளியச் செய்த ஆரியம் அழிய வேண்டும்!

தன்னர சுடைய தாகித் தழைத்ததண் டமிழி னத்தில்
நன்னய மின்றிப் பாழ்த்த நாசரீ கம்பு குத்திப்
பின்னிய வாழ்க்கை கெட்டுப் பிரிவெழச் செய்து
[நாட்டை
அன்னியர்க் காக்கி வைத்த ஆரியம் அழிய வேண்டும்!

அரசியற் பக்கம் சார்ந்து தமிழரை யடக்கி வீழ்த்தும்
முறையினைக் கொண்டெவ் வாறும் முயற்சியி லுயர்ச்சி
[பெய்திக்
கரவினைக் கருவியாகக் கைக்கொடு தமிழர் தங்கள்
அறிவினை யடைத்து விட்ட ஆரியம் அழிய வேண்டும்!

நாட்டினுக் குரிய மக்கள் நலிவுறச் செய்து செல்வக்
கோட்டையைக் கட்டிக் கொண்டு குடியிருந் தின்ப
[வாழ்வில்
மேட்டிமை யோடும் சொந்த மேன்மையென் றுரிமை
[பேசி
ஆட்டமிட் டானந்திக்கும் ஆரியம் அழிய வேண்டும்!

மக்களை மதித்தி டாமல் மாக்களென் றெண்ணி
[யென்றும்
மிக்குயர் வடைந்தி டாமல் வீழ்ந்துகீழ்க் கிடந்து சேயத்
தக்கவா றடக்கிப் பெற்ற நன்றியுந் தானெண் ணாமல்
அக்கிர மத்தா லோங்கும் ஆரியம் அழிய வேண்டும்!

உழைப்பவன் தமிழன் ஆனால் உண்பவன் ஆர்ய னானன்
களைப்பயிர் வளர்ந்து விட்டால் கழனியில் விளைச்ச
[லுண்டோ
இளைப்புறுந் தமிழன் இன்பம் எய்திடத் தமிழ்த்தண்
[தோட்டம்
அழிப்புறக் களையா நிற்கும் ஆரியம் அழிய வேண்டும்!

தண்டமிழ் வாழ இங்கே தமிழர்கள் வாழ்வி லோங்கிப்
பண்டைய நிலையில் நின்று பாரினிற் சிறக்க நன்மை
கொண்டுவந் தின்ப மூட்டும் புதுமையிற் குறியுங் கூட்ட
அண்டையி லொதுங்கிடாமல் ஆரியம் அழியவேண்டும்!

—"அறம்"

திறந்த மடல்

... கூத்தரசன் ...

மகாத்மா அவர்கள். (வட நாடு.)

காந்தியாரே, வணக்கம். வடநாட்டின் பாசிஸ வெறியால் ஏற்பட்டுவரும் பல தொல்லைகளின் காரணமாக, இதுவரை கையாண்டு வந்த தன்மைகளை விட்டு உண்மைகளை எடுத்துக் கூறும் அளவுக்கு அந்நாட்டிலுள்ள சிலருக்காவது சிந்தனை தெளிவுற்று வருவது வரவேற்கத்தக்கதாகும்.

உதாரணாக அ. இ. கா. தலைவர் ஆச்சார்யா கிருபாளினி அவர்களே காங்கிரசின் இன்றைய போக்கையும், ஆகஸ்டு சுயராஜ்யத்தின் அலங்கோலத்தையும் டெல்லித் தெருக்களிலே கள்ள மார்கெட் பகிரங்கமாக நடைபெறுவதிலிருந்து காங்கிரசின் ஏதேச்சதிகார ஆட்சி வரையிலுள்ள கொடுமைகளையும் எடுத்துக் கூறி வெளியேறியும் விட்டார்.

தாங்களோ இதுவரையில் அரசியலையும் மதத்தையும் ஒன்றாகக் குழப்பி அதன் காரணமாக ஒரு சிறிதும் ஆதாரங்கூட யில்லாத இந்து மதம், இந்துக்கள் என்ற போர்வையில் மக்களிடையே மத வெறியை உண்டாக்கி வந்தீர்கள்.

இதை பல அறிஞர்களும் குறிப்பாக தென்னாட்டில் பெரியார்ராமசாமி அவர்களைப் போன்ற தலைவர்கள் பலரும் சரித்திர சான்றுகளுடன் எடுத்துக் கூறும் போதெல்லாம், கவலைப்படாதிருந்தது மட்டுமின்றி இந்து மதம், இந்துக்கள் என்ற பேரால் இந்நாட்டு மக்களின் அறிவை பாழாக்கிய கூட்டத்தினரின் ஆதிக்கத்திற்கு தூபம் போட்டு வந்தீர்கள். அதுவுங்கூட சாதாரணமாக அல்ல, அந்தராத்மாவின் பேரால். அரசியலின் பேரால், இந்த மதவெறி அரசியலில் புகுந்த பின்னர் தான் வடநாடு இன்றைய கொள்ளை, கொலைக்கு உரிமை பெற்றதாக ஆகிவிட்டது.

இத்தனை விபரீதங்களுக்குப் பின்னர்தான் தாங்கள் வழிபடும் ஆண்டவன் தங்களை உண்மை கூறும்படி கட்டளை பிறப்பித்தார் போலும்.

சென்ற வாரம் தாங்கள் வழக்கம் போல் நடத்தும் பிரார்த்தனை கூட்டத்தில் இந்து, இந்துமதம் என்பதைப் பற்றி விரிவுரை யாற்றுகையில் "இந்துக்கள் எனப்படுவோர் சிந்து நதிக் கரையில் வந்து குடியேறிய கூட்டத்தினர்; எனவே அவர்களுக்கு சிந்துக்கள் என்ற பெயர் வழங்கலாயிற்று. நாளடைவில் 'சி' 'ஹி' ஆக மாறி இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களால் கையாளப்பட்டதே இந்து மதம் என்பது; ஆனால் அம்மதம் எல்லோரையும் அன்பாக வரவேற்றது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இந்துக்கள் என்றால் புறமுதுகு காட்டி ஓடியவன்; திருடன், என்றெல்லாம் அறிஞர்கள் பொருள் கூறியிருக்கின்றனர், எனவே சிறிதேனும் மான ரோஷ மிருப்பவர்கள் இந்து என்று கூறிக்கொள்ள ஒப்புக் கொள்ள மாட்டார்கள். தென்னாட்டவர்களாகிய திராவிடர் கீழ்த்தரமான மதவெறியில் புரண்டு மக்களை பிளவு படுத்தும், அடிமைப்படுத்தும் சிறுமதியாளர் அல்ல என்று சுயமரியாதை இயக்கமும்—இன்று திராவிடர் கழகமும் கூறுவதை தவறாகக் கருதிவரும் தோழர்களுக்கு தங்களின் 'ஞானோதயம்' ஒரு எடுத்துக் காட்டாக யிருக்கு மென்பதில் ஐயமில்லை.

அந்நிய நாட்டிலிருந்து சிந்து நதிக் கரையோரம் வந்து குடியேறிய கூட்டத்தினரின் ஆதிக்கத்திற்கு தாங்கள் இதுவரை இந்து மதம், இந்துக்கள் என்ற பேரால் ஆதரவு தந்து இந்நாட்டை அரசாண்ட சமுதாயத்தை மாக்கள் கூட்டம்போன்று செய்து வந்திருப்பினும் இன்றளவிலாவது உண்மையை எடுத்துக் கூறியதற்கு நன்றி பாராட்டுகிறேன்.

காலமாறுதலை பகுத்தறிவின் வேகத்தை இன உணர்ச்சியை எவரும் தடுக்க முடியாது, தடுப்பவர் யாராயிருப்பினும் அவர்கள் தோல்வியுற்று இறுதியில் உண்மை உணர்வர் என்பதற்கு தங்களை விட வேறு ஒருவர் எடுத்துக் காட்டாக யிருக்கமுடியாது.

இந்து மதம் என்ற பேரால் எல்லோரையும் அன்பாக வரவேற்றுதான் மக்களின் அறிவை, உணர்ச்சியை அடிமை கொண்டது அந்நியநாட்டிலிருந்து பிழைக்க வந்த ஆரியம்.

சுயமரியாதை அல்லது திராவிடர் இயக்கம் என்னசெய்து விட்டது என்று கேட்கும் தோழர்களும் பழைய பத்தாம் பசலிகளும் இன்று பகுத்தறிவு பாதையில் வந்தேதீரவேண்டும் என்ற புத்துணர்ச்சியை உண்டாக்கி யிருக்கிறது தங்களின் போக்கின் மாறுதல்.

அரசியல் விவகாரங்களில் தங்களின் கருத்துக்கள் எவ்விதமிருப்பினும் மக்களின் அறிவையே பாழாக்கி ஜாதி வகுப்பு வேற்றுமைகளை உண்டாக்கி வரும் சமுதாய விடயங்களிலாகிலும் தங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள தெளிவும் உறுதியும் வளரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதனால் தங்களின் மகாத்மா பட்டத்திற்கு "இந்து மதம்' ஆபத்தை விளைவித்தாலும் கவலைப்படாதீர்கள்.

"கூத்தரசன்"

ஃ ஃ

காளா வெங்கட்ராவ் அவர்கள்,
சென்னை.

ரெவின்யூ மந்திரியாரே, வணக்கம் தாங்களும் ஆரம்பித்துவிட்டீர்கள் போலும், தங்களின் வேலையை விட்டு மற்றவைகளில் தலையிட.

ஆந்திர விஞ்ஞான சமிதி ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் தாங்கள் பேசுகையில் நிஜாம் படையெடுத்தால் ஓட ஓட விரட்டுவோம், என்று கபர்தார் செய்திருக்கிறீர்கள். ஓட ஓட விரட்டுவது வீரத்தனமாகாது. அது மாத்திரமல்ல போரில் என்ன செய்வோம் என்பதை முன்கூட்டியே தப்பட்டை அடிப்பவரும் விவேகிகளாக மாட்டார்கள்.

கத்திக்கு கத்தி வாளுக்கு வாள் என்ற வாய்துடுக்கை தேவையில்லாத காலத்தில் மக்களிடம் கூறியதின் காரணமே இன்று வடநாட்டில் ஒருபாபமுமறியாத மக்கள் தொல்லைகளுக்கு உட்படலாயிற்று.

வடநாடுதான் இக்கதிக்கு ஆளானதென்றால் தென்னாட்டிலுமா அந்த மத வெறியாட்டத்திற்கு தூபம் போடவேண்டும். அதிலும் பொறுப்பானபதவியிலிருக்கும் தங்கள் போர்க் காலங்களில் செய்யப்போவதை பகிரங்கமாகக் கூறுவது எதிரிகளுக்குத்தான் ஆக்கமளிக்குமேயன்றி வேறில்லை.

எனவே இனியாகிலும் மக்களிடம் எதைப் பேசவேண்டுமோ அதை மட்டும் கூறிவிட்டு நீங்கள் செய்யப்போகும் வீரப்பிரதாபத்தைப் பற்றி வெளியே டம்மாரம் அடிக்காதீர்கள். அவசியம் ஏற்பட்டால் செய்கையில் காட்டுங்கள் அதுதான் அறிவுடை

யாகும்.

அதைவிடுத்து, ஆவேசப் பேச்சைப் பேசி வகுப்பு கலவரத்தை வரிசை கொண்டு அழைக்க வேண்டாம். அது சிறுமதியாளரின் செய்கையாகும்.

"கூத்தரசன்"

ஃ ஃ

ஷேக் அப்துல்லா அவர்கள், (காஷ்மீர்)

இடைக்கால பிரதமரே! வணக்கம் தங்களின் "அருஞ்சேவை"யை நாடும், சரித்திரமும் என்றும் மறக்காது. சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி என்பதின் தத்துவார்த்தமே தங்களை போன்றோர்க்கு மந்திரி பதவிகள் கொடுப்பதைத் தவிர மக்களிடத்தில் ஆட்சியோ அல்லது ஜனநாயக முறை கொண்டதாகவோ இதுவரை பொறுப்பாட்சி வழங்கியுள்ளதாகக் கூறப்படும் எந்த சமஸ்தானங்களிலும் காணப்படவில்லை. இதை அரசியல் அறிவுடையோர் அனைவரும் ஒப்புக் கொள்வர்;

எந்த வகையிலோ தாங்கள் காஷ்மீர சமஸ்தானத்திற்கு இடைக்கால பிரதமராகவும் ஆக்கப்பட்டு விட்டீர்கள். அதைப்பற்றியும் எனக்குக் கவலையில்லை. ஆனால் பதவிக்கு வந்தவுடன், இன்றைய ஆட்சி பீடந்தாங்கிகள் அடிக்கடி வாயளவில் கூறிவரும் வெத்து வேட்டுப் பேச்சைத் தாங்களும் விட்டபாடில்லை.

காஷ்மீர் சமஸ்தானத்தில் கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்வோருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று வாய் வேதாந்தம் பேசுகிறீர்கள். கள்ளமார்க்கெட் காரர்களுக்கு தூக்கு தண்டனை விதிப்பேன் என்று கூறிய பண்டித நேருவே இன்று டெல்லித் தெருக்களிலே கள்ளமார்க்கெட் தலை நிமிர்ந்து விரித்தாடுகிறது என்று ஆச்சார்யா கிருபாளினி கூறும் அளவுக்கு வாய் பொத்தி யிருக்கிறார் என்றால் தங்களின் வாய் சவடால் எம்மாத்திரம்?

பொறுப்பாட்சி என்ற பேரால் பதவி வேட்டையாடிவரும் தங்களைப் போன்றோர் இம்மாதிரி பேச்சுக்களால் பொது மக்களை ஏய்த்துவரும் காலம் அதிக நாள் நீடிக்காது என்பதை மட்டும் நினைவில் வைக்க வேண்டுகிறேன்.

"கூத்தரசன்"

மத்திய சர்க்காரின் பணப்பெட்டி நிலை

இந்துஸ்தான் சர்க்காரின் வரவு செலவு விவரத்தை வெளியிட்டுள்ள நிதி மந்திரி கனம் ஆர். கே சண்முகம் சர்க்காரின் பணப்பெட்டி இன்று எந் நிலையிலுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

வரவு	— 171,15 லட்சம்
செலவு	— 197,39 ,,
துண்டு விழுவது	— 26,24 ,,

செலவு, 197 கோடியே 39 லட்சம். இதில் ராணுவ செலவுக்கு 92 கோடி 74 லட்சமும், அகதிகள் செலவுக்கு 22 கோடியுமாம். ஆக மொத்தம் செலவு 197 கோடியில் ராணுவத்துக்கும்—அகதிகளுக்கும் சேர்த்து 114 கோடியாகிறது. மக்களின் வாழ்க்கை நலனுக்கேற்ற முக்கிய திட்டங்கள் அத்தனைக்கும் சேர்த்து பகுதிகூட செலவிடப்படவில்லை. ராணுவத்துக்கும்—அகதிகளுக்கும் மட்டும் பகுதிக்கு மேல் செலவு காட்டியிருக்கிறார், நிதி மந்திரி. போதாக் குறைக்கு வரவு செலவிலில் பொருளாதாரப் பள்ளம் வேறு.

சுதந்திர பட்ஜெட்டல்லவா இது! எனவேதான் ஆகஸ்டு 14-ந் தேதி நள்ளிரவில் வந்த சுயராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்காக ராணுவத்துக்கு 92 கோடியும் அகதிகளுக்கு 22 கோடியும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திர விழா கொண்டாடப்பட்டதின் காரணமாக சுதந்திர கள்ளமார்க்கெட்டும் காட்சியளிக்கின்றன. தொழிலாளரும் சுதந்திர தடியடியும் அவசர சட்டங்களும் சிறைவாசங்களும் கண்டுவருகின்றனர் இப்போது சுதந்திர பட்ஜெட்டையும் காண்கிறோம்.

அடுத்தது என்னவோ அறியோம் இந்த ஆகஸ்டு சுயராஜ்யத்தில்!

30-11-47 ஞாயிறு முதல் மகத்தான 3-வது வாரம்!

தஞ்சை
கிருஷ்ணலீலா தியேட்டர்

★

நடிகவேள் M. R. ராதா-மு. கருணாநிதி

நடிக்கும்

தூக்குமேடை

(கதை—வசனம்: மு. கருணாநிதி.)

திராவிட மறுமலர்ச்சி நாடக சபை நடிகர்களின் இணையற்ற நடிப்பையும் உணர்ச்சியூட்டும் சொற்பெருக்கையும் கேட்டு களிப்புற வேண்டுவது இன்றியமையாததாகும்.

தலைவர் பெரியார் அவாகளும் மற்றும் பல அறிஞர்களும் கண்டு பாராட்டியுள்ளனர். தினசரி நாடகம். திங்கள் தோறும் விடுமுறை. R. S. ஆர்கனைசர்.

அறிஞர் C. N. அண்ணாதுரை, M.A. எழுதியவை

1. ரோமாபுரி ராணிகள்	2-4-0	5. கற்பனைச் சித்திரம்	1- 0-0
2. கம்பரசம்	1-8-0	6 வர்ணாஸ்ரமம்	0-12-0
3. குமரிக்கோட்டம்	1-0-0	7. ஆரியமாயை	1- 0-0
4. விடுதலைப்போர்	1-0-0	8. மே தினம்	0- 5-0

குறிப்பு:— 'ஆரிய மாயை' படிக்கமட்டுமே யன்றிப், பிறருக்கு விஷய விளக்கமாற்றவும், சந்தேகங்களைப் போக்கவும், மாற்றாரின் எதிர்ப்புரைகளுக்கு மறுப்புரை தரவும், பெரிதும் பயன்படும் என்று கருதுகிறேன். பேச்சாளர்களுக்குப் பேருபகாரியாக இந்நூல் இருக்கும்.

ஆரிய ஆதிக்கத்திலிருந்து திராவிட நாடு விடுபட வழிவகை கோருவோருக்கு இந்நூல் எழுச்சியூட்டும் என்பது என் நம்பிக்கை. திராவிடத் தோழர்கள் இதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

(Sd.) சி. என். அண்ணாதுரை.

திராவிடப் பண்ணை .... தெப்பக்குளம், திருச்சி.

'திராவிடன்' பொங்கல் மலர் டெம்மி 1x4 100-பக்கங்கள் விலை ரூபாய் ஒன்று வேண்டுவோர், உடனே விவரம் எழுதுங்கள்.

நேயர்களுக்கு

★

தலைவர் பெரியார் அவர்களின், புலியகுளம், கோபி, சொற்பொழிவு (புத்தகவடிவாக) 20பக்கங்கள் வெளிவருமெனக்கருதி 2 அணு விலை விதித்திருந்தோம் ஆனல் எதிர்பாராத வகையில் 64 பக்கங்களாவதால் புத்தகம் ஒன்றுக்கு 6அணு விலையில் விற்ருல்தான் அசலுக்கே கட்டுபடியாக முடியும். எனவே விலையை 6 அணுவாக உயர்த்த வேண்டியிருப்பதற்கு மன்னிக்க வேண்டுகிறோம்.

—மானேஜர்

திராவிடன்

சென்னை 30-11-47 ஞாயிறு

காலாடி கர்த்தர்களுக்கு எச்சரிக்கை

திராவிடர்கள் அனைவரும், அவர்கள் எக்கட்சியினராயிருப்பினும், அல்லது அரசியல், மதவேறுபாடுடையோராயினும், பார்ப்பனர்களைப் போலவும், பரங்கியரைப் போலவும், வடநாட்டுக்காரர்களைப் போன்றும் ஒற்றுமையுடன், இனப்பற்றுடன் தன்மானத்துடன் வாழவேண்டுமென்பதே திராவிடர் கழகக் கொள்கையும் கோட்பாடுமாகும்.

கேவலம் பட்டம் பதவிகளுக்காக மற்றவர்களின் போற்றுதலுக்கு ஆசைபட்டோ, தூற்றுதலுக்கு பயந்தோ இனத்தைக் காட்டிக் கொடுக்கும் அல்லது நம் இனத்தவருக்கு நஷ்டத்தை விளைவிக்கும் எக்காரியத்திலும் திராவிடர் கழகத்தினர் ஈடுபடுதல் கூடாதென்பதே தலைவர் பெரியார் அவர்களின், கண்டிப்பான கட்டளையுமாகும்.

இதை முன்னிட்டேதான் திராவிடர் இயக்க கூட்டங்களில், அரசியல் எதிரிகள் எனப்படுவோர் வேணுமென்றே கலவரங்கள் விளைவித்தாலும் கழகத் தோழர்கள் அதை பொறுத்துக்கொண்டு பதிலுக்கு ஒன்றும் செய்யாமல் வாளாயிருந்து வருகின்றனர்.

மதுரை கலவரத்திலிருந்து அண்மையில் அண்ணமலை நகர் கலவரம் வரை திராவிடர் இயக்கத்தவர்கள் காட்டிவரும் பொறுமையைப் போன்று எந்த அரசியல் கட்சியினரும் இன்றுவரை கையாண்டதாகக் கூறவும் முடியாது.

ஆனல், திராவிடர் கழகத்தின் இவ்வடிப்படையான கொள்கையை நேர்மையை அறியாத அல்லது அறிந்திருந்தாலும் ஆணவத்தால் சிலர் கூட்டங்களில் கலவரம் செய்ய கங்காணிகளையும் கைகூலிகளையும், விபீஷணர்களையும், இனத்தைக் காட்டிக் கொடுக்கும் இழிதன்மையாளர்களையும் ஏவிவிட்டு இன்னல்கள் புரிய முனைந்துள்ளனர்.

சென்னையில், 23-ந்தேதியன்று நடைபெற்ற திராவிடர் கழக ஊர்வலத்தின்போது கல்வீச்சும், சோடா புட்டி வீச்சும், தடியடிகளும் கழக எதிரிகளால் கையாளப்பட்டிருக்கிறது அத்துடன் போலீஸ் அதிகாரிகளின் கார்களும் இந்த காலாடிகளின் செய்கையால் சேதமடைந்துள்ளன என்று தெரியவருகிறது. நண்பர்கள் சாயிப் தம்பி, முத்துகிருஷ்ணன் இன்னும் பல கழக நண்பர்களுக்கு கடுங்காயங்களும் தொல்லைகளும் ஏற்பட்டுள்ளன. ஆனல் இவ்வளவிற்கும் கழகத்தோழர்கள் ஒரு சிறிது ஆத்திரமோ ஆவேசமோ கொண்டார்களில்லை.

இந்த கலவரத்தைச் செய்தவர்கள் சுருட்டுத் தொழில் செய்யும் இரண்டு தோழர்கள் என்றும், இவர்களை ஏவிவிட்டவர் கணேசம் அலுமினியம் கம்பெனியின் சொந்தக்காரரான ஓர் மார்வாடி என்றும் கூறப்படுகிறது.

அன்று சென்னையில் திராவிடர் கழகத் தோழர்களும், பட்டேலின் அகராதிப்படி பதிலுக்குப்பதில் என்ற முறையில் இறங்கியிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்,எத்தனை உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும், எவ்வளவு பொருள் நஷ்ட மேற்பட்டிருக்கும். ஆனல் இவ்வளவும் யாருக்கு? வடநாட்டவராகிய மார்வாடி கும்பலுக்கா அல்லது பார்ப்பனர்களுக்கா? அவர்கள் ஏன் அங்கு தலைகாட்டப் போகின்றனர்.

ஏவிவிடப்பட்டு அதற்கு இரையான மாற்றுக் கட்சித் திராவிடர்களின் உயிரும், பொருளுந்தானே சேதப்பட்டிருக்கும். இதேபோன்று அன்று மதுரையிலும் திராவிடர் கழகத்தவர்கள் பதிலுக்குப்பதில் என்று மனதில் நினைத்திருந்தால்கூட என்ன கதியாயிருக்கும். வைத்தியநாதய்யர்களுக்கு ஒரு சிறிது ஆபத்தும் விளைந்திராது. ஆனல் நமது காங்கிரஸ் திராவிடர்கள்தானே தொல்லைக்கும் ஆளாகியிருப்பர். மாற்ருனின் ஏவலுக்கு அடிபணிந்து இவ்வித காலாடித்தனத்தில் சிலர் ஈடுபடுவதில் ஒரு சிறிதாவது அறிவுடமை யிருக்கிறதா?

திராவிடக் கழகக் கொள்கை யாருக்குத் தீமை அல்லது தொல்லை விளைவிக்கின்றது? உருகுலைந்து உழைத்தாலும் அதற்கேற்ற உரிமை யில்லையே யென்று ஏங்கிவாடும் பாட்டாளிகளைத் தொல்லையிலாழ்த்தும் பாசிஸத்திற்கும் அதற்குத் துணையாயுள்ள பார்ப்பனீயத்துக்குந்தான் கழக வளர்ச்சி கசப்பாய் மட்டுமல்ல, அவர்களின் ஏமாற்றுப் பித்தலாட்டத்தை வெளிப்படுத்துகின்றதே என்ற எரிச்சலும் இருக்கலாம். ஆனல், ஓரளவாவது மானமோ, ரோஷமோ, நன்றியோ, அல்லது மனிதத்தன்மையுடன் வாழவேண்டுமென்ற எண்ணமோவுள்ள எந்தத் தொழிலாளிக்கும் கழகக் கொள்கையில் எதிர்ப்பு இருக்க முடியாது.

திராவிடக் கழகத்தை ஒரு தொழிலாளி எதிர்க்கிருன் என்ருல் அவன் தொழிலாளர் வர்க்கத்திற்கே கேடு புரிந்து கைகூலிபெற்று முதலாளித்துவத்திற்குத் தனது வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்கும் ஈனத் தொழில் புரிபவன் என்றுதான் கூறமுடியுமேயன்றி வேறில்லை.

சென்னை ஊர்வலத்தில் கல் வீசிய இரண்டுபேரும் சுருட்டுத் தொழிலாளர் என்பது மட்டுமல்ல வேறு எந்தத் தொழிலாளியாயிருப்பினும் அவர்கள் மீது சீற்றங் கொள்வதில் பயனில்லை. அன்றியும் சட்டபூர்வமாகவோ வேறு வகையிலோ தண்டிப்பதைக்கூட நாம் வரவேற்கத் துணியவில்லை.

ஏனெனில், இவ்வித காலாடிகளைத் தூண்டிவிட்டு கலகத்திற்கு விதை போடும் கயவர்களின் கும்பலைக்கண்டு பிடித்து அவர்களின் ஆணவத்தை அடக்க வேண்டியதே அரசியலாரின் நீங்காக் கடமையாகும். எய்தவனிருக்க அம்பை நோவதில் பயனில்லை.

திராவிடர் இயக்க வளர்ச்சியைக் கண்டு பார்ப்பனீயத்துக்கும், வடநாட்டு பாசிஸத்துக்கும் அவர்கள் தம் அடிமைகளுக்கும் அடிவயிறு பற்றி எறிகிறது. இதன் காரணமாகவே சில பேர்வழிகள் பொதுக் கூட்டங்களிலே கழகத்தை நேர்மையின்றி தூற்றி வருகின்றனர். ஆனல் இவர்களி

தூற்றுதல், காலிகளை ஏவி, கல் கத்திகளை வீசுதல் ஆகியவைகளினால், இனி திராவிடர் இயக்க வளர்ச்சியைத் தடுக்க மட்டுமல்ல சிறிதுகூட அசைக்கவும் முடியாது என்பது உறுதி. வேண்டுமானால் இக்கலவரங்களைக் கொண்டு, அதை முன்வைத்து கழகப் பிரசாரத்திற்கு தடை உத்திரவுகளை விதிக்கச் செய்யலாம், அரசியலாரைத் தூண்டி.

அதுவும் எத்தனை நாளைக்கு முடியும். அது மட்டுமல்ல அரசியலார், காலாடிகளை வளர்ப்பவர்களாக யிருந்தாலொழிய இவ்வித சூழ்ச்சிகளுக்கு இணங்கவு மாட்டார்கள். அதற்குப் பதிலாக கலவரத்தைத் தூண்டிவிடும் இக்கும்பலை அடக்கத்தான் அரசியலார் இறங்குவார்கள் என்ற நம்பிக்கையை நாம் இன்னும் இழந்துவிடவுமில்லை.

நிற்க, திராவிடர் இயக்கத் தலைவர் பெரியார் அவர்கள் கழகத்தைச் சேர்ந்துள்ள தோழர்களை பொறுமையையே கையாண்டுவரச் சொல்லுகிறார், அதற்கேற்ப அவர்களும் அடங்கியே தான் வருகிறார்கள், எனவே என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணத்தால் கழகத்தின் எதிரிகள் எனப்படுவோர் மேலும் இம் முறையைக் கையாள்வது இன்றைய நிலையில் நாட்டுக்கு உகந்ததாகாது என்பது மின்றி எக்கூட்டம் காலாடிகளை வளர்த்து வருகிறதோ அக்கும்பல் தனக்குத் தானே குழியை வெட்டிக் கொண்டதாகவே யாகும்.

நாம் என்னதான் செய்தாலும் திராவிடர் என்ற காரணத்திற்காக நம்மிடமுள்ள விபீஷணர்களை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று காலாடிகளின் கர்த்தர்கள் நினைத்து மேலும் தங்களது வாலை நீட்டுவார்களேயானால் ஒன்று அரசியலாரின் புத்தி புகட்டும் தன்மையின் மூலமாவது அவர்கள் அறிவுபெற வேண்டிய நிலை ஏற்படும் அரசியலார் அதைச் செய்யத் தவறினால் திராவிட இன எழுச்சியின் மூலம் கட்டாயம் அந்த கயவர்களின் கூட்டத்திக்கு புத்தி புகட்டியே தீர வேண்டியிருக்கு மென்பதை எச்சரிக்கை செய்வதுடன் பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதையும் காலாடிக் கர்த்தர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

திராவிடர் இயக்கம், பொதுஜன முன்னேற்றம் நாட்டின் விடுதலை உழைப்பவர்களின் உரிமை ஆகியவைகளுக்கு பாதகமோ அல்லது அமைதிக்கு பங்கமோ விளைவிக்கிறதென யாராவது கூறமுடியுமா? ஏன் அரசியலாரையே கேட்கிறோம், கூறட்டுமே பார்க்கலாம்.

திராவிட கழகத்தினர் கள்ள மார்க்கெட் நடத்த தூபம் போடுகின்றனரா, லைசென்ஸ், பெர்மிட்களுக்காக சட்டசபைமுன் வலம் வருகின்றனரா? காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பதில் கழகத்தவர்கள் மந்திரிகளாகவும். அல்லது சட்டசபை ஒட்டுக்கும் மாறடித்துக் கொள்கின்றனரா? இன்னும் கூறுவோம் ஆச்சாரியாருக்குப் பதில் பெரியார் அவர்கள் ஆட்சி பீடத்திலிருக்க வேண்டுமென்று கூறுகிறோமா? தொழிலாளர் உரிமைப் போராட்டத்தில் 'கங்காணி' வேலைகள் செய்யப்படுகிறதா? ஏற்கனவே யிருக்கும் தொழிலாளர் சங்கத்துக்கு போட்டி சங்கம் ஆரம்பித்து அதில் ஆதிக்கம் பெற முன்வரப்படுகிறதா?

கூட்டங்களிலே முதலாளிகளைத் திட்டிவிட்டு திரைமறைவிலே அவர்களின் அடிபணிந்து பொருளீட்டுகிறோமா? அல்லது முதலாளித்துவ வெறியர்கள் ஒருவராவது கழகத்தில் உறுப்பினராய் இருந்துவருகின்றனரா, இந்து முஸ்லீம் கலவரத்தை உண்டாக்கப்படுகிறதா?

திராவிடரை சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்றுகூறும் பார்ப்பனர்களைப்பழி வாங்கவேண்டும் என்று கூறுகிறோமா? வெள்ளையர் இந்தியாவை மார்க்கெட்டாக கொண்டது போன்று நம் தென்னாட்டை சுயராஜ்யப் பேரால் சுரண்டிவரும் வடநாட்டவர்கள் மீதாவது பலாத்காரம் கையாள வேண்டும் என்று கனவிலாவது நினைத்ததுண்டா, எவ்வளவோ தொல்லைகளும் குறைகளுமிருந்துங்கூட இன்றைய நிலையில் அமைதிக்கு புறம்பான செய்கையில் ஈடுபடுவது கூடாதென்பதில் ஒரு சிறிதாவது தவறியதுண்டா? திராவிடர் இயக்கத் தலைவர்களையும் இயக்கத்தையும் பத்திரிகைகளையும் சிறிதுகூட நேர்மையின்றி கீழ்த்தரமான பாஷையினால் இன்னும் கூறவேண்டுமானால் சர்க்காரின் பத்திரிகை சட்டத்தை மீறிய முறையிலும் பலாத்காரத்தை தூண்டப்படும் வகையில் எழுதப்பட்டிருப்பதாககூறப்படுமளவு ஒருபார்ப்பனன் பத்திரிகை வெளியிட்டும் திராவிடர் கழகத்தவர்கள் அதன் மீது சிற்றம் கொண்டனரா அல்லது கவலைப்பட்டனரா?

ஆக தொழிலாளர் நல்வாழ்வுக்கும் நம் நாட்டின் உண்மை விடுதலைக்கும் வகுப்பு, ஜாதி ஆணவங்கள் ஒழிந்து மனிதத்தன்மை வளர வேண்டுவதற்கும் பாடுபடும் திராவிடர் கழகத்தை வேணுமென்றே சில வம்பர்கள் வலிச் சண்டைக் கிழுத்து நம் தென்னாட்டிலும் வடநாட்டின் இன்றைய அலங்கோலத்தை உண்டாக்கி அதன் மூலம் திராவிட இன எழுச்சியை அடக்கிவிடலாம் என்ற மனப்பால் குடிக்கின்றார்கள் என்றே கருதவேண்டியிருக்கிறது. இந்த சூழ்ச்சி வெற்றி பெறாது அதைவிட விரைவில் அது அழிந்துபடும் என்பது உறுதி.

எத்தனை நாளைக்கு திராவிடர்களை மதத்தாலும், கட்சியாலும் கடவுள் தன்மையாலும் பிறவற்றாலும் பிரித்து அதன் மூலம் ஆதிக்கம் செலுத்தும் வாழ்வு நீடிக்கமுடியும். பிரிட்டனின் பிரித்தாளும் சூழ்ச்சியே இன்று சந்தி சிரிக்கிறதென்றால் மற்றவைகள் எம்மாத்திரம்?

எனவே திராவிடத்தின் எதிரிகள் எவரா யிருப்பினும் அவர்களுக்கு ஒன்று கூறவிரும்புகிறோம். திராவிடர் இயக்கம் வலிய யாருடனும் பகைமை கொள்ளவோ பகைமை கொள்ளும்படி தூண்டுதல் செய்யவோ ஏற்பட்டதல்ல அதன் கொள்கையும் அதுவல்ல. ஆனால் திராவிடர் இயக்கத்தை வலிய வம்புக்கு இழுத்து அதன்காலை மிதித்தாலுங்கூட சரி எதிரிகளின் தலைமீது திராவிடத்தின் கால் இருக்கும் என்பதையும் எச்சரிக்கின்றோம்.

இந்து முஸ்லீம் சச்சரவும், கலவரங்களும் கூடாதென்பதற்காக விசேஷ போலீஸ் படைகளையும் ஹோம் கார்டுகளையும் உண்டாக்கினாலும், பெரியார் அவர்களின் பிரசார பலத்தினாலேயே நம் தென்னாட்டில் இந்து முஸ்லீம் சச்சரவு இதுவரை ஏற்படாமலிருந்து வருவதை அனைவரும் அறிவர். வடநாட்டில் காந்தியார் அவர்கள் உண்ணாவிரதமும் அரசியலாரின் கடுமையான நடவடிக்கைகளுமிருந்தும் வகுப்பு ஒற்றுமையை இன்றுங்கூட நிலைநாட்ட முடியாது தவித்துவரும்போது நம் நாட்டில் திராவிடர் இயக்கம் தனது பிரசாரமூலம் இவ்வொற்றுமையை வளரச் செய்து வருகிறதென்பதையும் எக்காரணம் முன்னிட்டும் பலாத்காரத்தையோ, கலவரத்தையோ உண்டாக்கி நாட்டில் வீண் கொத்தளிப்புகளை ஏற்படுத்துவது தற்கால நிலைக்கு ஏற்றதல்ல என்பதுடன் கருத்துவேற்றுமைகளை அல்லது குறைகளை பிரசாரத்தின் வாயிலாக எடுத்துக்கூறினால் போதுமென்ற அளவில் தங்களது

கொள்கையினை எடுத்துக்கூறிவரும் திராவிடர் கழகத்தின் மீது சில பேர் வழிகள் காங்கிரஸ் பேராலும் மற்றும் அரசியல் பேராலும் செய்து வரும் கலாடித்தனத்திற்கும் அந்த கும்பலுக்கும் அரசியலாரே மறைமுகமாக சலுகைக் காட்டுகிறார்கள் என்று கூறப்படும் பழிச்சொல்லுக்கு ஆளாகாமலும் அதேபோன்று அரசியலார், காலாடி கும்பலினர் செய்கையின்மீது பழிபோட்டு விட்டு கழக பிரசாரங்களுக்கு வீண் தடைகள் விதிக்கா வண்ணம் இருக்கவேண்டியது நம்மாகாண அரசியலாரின், குறிப்பாக அண்மையில் போலீஸ் இலாக்காவையும் மேற்கொண்டுள்ள பிரதமர் ஓமந்தூராரின் நீங்காக்கடமை யாகுமென்பதை வலியுறுத்தி கூறுகிறோம்.

தவிர எதிரிகளின் கீழ்த்தரமான முறைகளினால் நமக்கு பலவித தொல்லைகளும் சேதங்களும் ஏற்பட்டாலுங்கூட அவைகளை சகித்துக் கொண்டு மேலும் தலைவர் பெரியார் அவர்களின் உத்திரவுபடி அமைதியையே கையாளுமாறு கழகத்தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

சூழ்ச்சியாளர்களின் செய்கைகளினால் நமது உணர்ச்சி மென்மேலும் வளருமென்பது உறுதி. எனவே நமது இன எதிரிகளின் சூழ்ச்சி வீழ்ச்சியுற வேண்டுவதற்கு நாம் உடனடியாக செய்யவேண்டுவது, பட்டிதொட்டிகளிலும் கிராமங்களிலும் நகர்களிலும் கழகங்களை நிறுவுங்கள் லட்சக் கணக்கணக்கில் உறுப்பினர்களை சேருங்கள். எங்கும் கருஞ்சட்டைத் தொண்டர்படையை அமையுங்கள். வடநாட்டு பட்டேலிசம் தேசியத்தின் பேரால் செய்துவரும் கொடுமைகளை அமைதியான முறையில் மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள். இதுவே எதிரிகளின் சூழ்ச்சியை சிதறடிக்கும் சக்தியாகும். அதன் மூலம் திராவிடம் விரைவில் வெற்றி பெற்று வடநாட்டு பட்டேலிஸமும் அதைத் தாங்கி நிற்கும் பார்ப்பனீயமும் ஒழிந்தேதீரும் என்பது உறுதி. உறுதி. உறுதி.

வாழ்கதிராவிடம். வீழ்க பட்டேலிசம்

பெயர் மாற்றம்

சென்னை ஜியார்ஜ் டவுன் என்ற பெயரை வீரர் வ. வு. சி. அவர்களின் நினைவாக "சிதம்பரம் நகர்" என்று மாற்றவேண்டுமென சென்னை நகர சபையில் வரயிருக்கும் தீர்மானத்தை, நகரசபை உறுப்பினர் அனைவரும் ஆதரித்தே தீருவார்களென்பதில் ஐயமில்லை. இதனால் வ. வு. சி அவர்களுக்கு பெருமை ஏற்பட்டு விட்டதென்று கருதுவதைவிட, சென்னை நகரசபைக்கும், சிறப்பாக சென்னை மாகாணத்திற்கே அதிக பெருமை தரக்கூடியதாகும் என்பதை அனைவரும் அறிவர்.

ஆனால் இத்துடன் மட்டும் நகர சபை உறுப்பினர்களின் கடமை தீர்ந்து விட்டதாகக் கருதக் கூடாது. வடநாட்டிலே பார்த்தால் நம் நாட்டின் தியாகிகள், தேசபக்தர்கள் என்று கூறப்படுவோர், அறிஞர்கள் ஆகியோரின் நினைவுக் குறிகள் காணப்படவில்லை.

நம் நாட்டில் மட்டும், நகர்களுக்கும், தெரு, நந்தவனம், வீடு, உணவு விடுதி, தொழில் நிலயங்கள் முதல் அனைத்துக்கும் வடநாட்டவர்களின் பெயர்கள் இடப்பட்டுள்ளன. இந்நிலை இன்னும் நீடித்துக் கொண்டுபோவது நம் தென்னாட்டுக்கே இழிவு தரக்கூடிய செய்கையாகும்.

எனவே சென்னை நகரின் முக்கிய பகுதிகளில் ஒன்றுக்கு, இன்று வழங்கப்படும் சௌகார் பேட்டை என்பதை மாற்றி "பெரியார் ராமசாமிப் பேட்டை" என்றும், திராவிட இனத்தவர்களில் சேர்ந்தவர்களாகிய துணியை வெளுக்கும் தொழிலாளர்களை இழித்துக் கூறும் வகுப்புப் பெயரில் உள்ள வண்ணாரப்பேட்டை என்பதிற்கு பதிலாக, சிந்தனை சிற்பி 'சிங்காரவேலர் பேட்டை" என்றும், தொழிலாளர் தோழர்கள் பெரிதும் வசித்துவரும் இடமாகிய சூளையில் வெள்ளையர் பேரால்உள்ள கான்ரன்ஸ்மித் நகர்என்பதிற்குப் பதில் தொழிலாளர் தலைவர் திரு. "கலியாண சுந்தரம் நகர்" என்றும், அம்பட்டன் வாராவதி என்பதை நீக்கி "திருப்பூர் குமரன் பாலம்" என்றும், ஹாரிஸ் பிரிட்ஜ் என்பதை மாற்றி மொழிப் போராட்டத்தில்சிறை சென்று உயிர் நீத்த "தாலமுத்து நடராசன் பாலம்" என்றும் மற்றும் வெள்ளையர்—வடநாட்டவர் பேரால் உள்ள பொது இடங்களின் பெயர்களை உடனடியாக மாற்றி, பொது இயக்கங்களிலே அவர்கள் எக்கட்சியின் சார்பில் கலந்து தொண்டாற்றியிருப்பினும் சரி நம் நாட்டுத் தலைவர்கள், தொண்டர்கள் புலவர்கள், கவிஞர்கள், கலைவாணர்கள், தாய்மார்களின் பெயரையே வழங்குதல் வேண்டும்.

எக்காரணத்தை முன்னிட்டும் வடநாட்டவர் அல்லது வெள்ளையர்களின் பெயர்கள் மட்டும் நினைவுக்குறிகுறியாக நம்நாட்டுப் பொது இடங்களிலே இருத்தல் இழிவாகும்.

இவ்விதம் எழுதுவதால் அவர்கள் மீது நமக்கு வெறுப்பு என்று எண்ணுதல் கூடாது. வடநாட்டவர்கள் நம் நாட்டுத் தலைவர்களை எவ்வளவு வரை மதித்து நினைவுப் பெயர்களை இடுகின்றனரோ அதே விகிதப்படி நாமும் செய்ய கடமை பட்டிருக்கிறோம். அதுதான் தன்மானமுள்ள செய்கையுமாகும்.

எனவே, சென்னை நகரசபை உறுப்பினர் அனைவரும் இதுவிடயத்தை உடனடியாக கவனித்து ஆவன செய்தல் வேண்டும். அதற்கேற்ப எல்லா அரசியல்கட்சித் தோழர்களும் இதிலாவது ஒன்று சேர்ந்து கூட்டங்கள் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் கண்டு பெயர் மாற்றங்களின் அவசியத்தை எடுத்துக்கூற வேண்டும். பத்திரிகாசிரியர்களும் இதில் அக்கரை காட்டவேண்டியது இன்றியமையாததாகும் என்பதையும் நினைவூட்டுகிறோம்.

பாண்டியன் பாடல்கள்!

***

தண்குணமார் பழமரங்கள்
  தழைத்திருந்த ஊர்களுமே
இருந்தநல்ல திராவிடத்தில்
  இசையறியா ஆரியர்கள்
வந்தன்று புகுந்தவர்கள்
  வளமெல்லாம் கெடுத்துவிட்டார்
கோயிலிலே புகுந்துவிட்டார்
  குடிகளையே கலைத்துவிட்டார்
ஜாதியொடு மதங்களெனும்
  சாத்திரமாம் புரட்டுகளைப்
பேதபுத்தி கொண்டிங்குப்
  பெருகும்படி வளர்த்தனரே
திராவிடர்கள் நாட்டினிலே
  தக்கபடி பிளவு செய்து
தருணமறிந் தாரியர்கள்
  திராவிடர்க்குள் சதிபுரிந்தார்
அரசர்கள் உள்ளிட்ட
  அருமை மிக தலைவர்களை
அணைத்தன்று கெடுத்து விட்டார்
  அநியாயம் செயது விட்டார்.

(தொடரும்)

'திராவிட'னுக்கு

சந்தாதாரராக - சேருங்கள்

சவுண்டிகளுக்கு சவுக்கடி-1

திராவிடர் கழக வளர்ச்சியைக் கண்டு வடநாட்டு படேலிசமும், நம் நாட்டு பார்ப்பனீயமும் சூழ்ச்சிகள், சதி செயல்கள், புரிந்து வருகின்றன. இச் செய்கைகளை அவ்விரு கூட்டமும் நேரடியான முறையில் செய்வதற்கு ஆண்மையின்றி சிலமட்டரக பேர்வழிகளைப் பிடித்து திராவிடர் கழகத்தின் மீது வசைமாரி புராணமும் பொய்பிரசாரமும் செய்ய முற்பட்டுள்ளன.

இம்மாதம் 18-தேதியன்றுசென்னை கடற்கரையில் நடைபெற்ற வ. வு. சி. அவர்களின் பிறந்த தினவிழாவில் பல தோழர்கள், அவரின் சேவையை எடுத்துக் கூறினர்.

ஆனல் உதைத்த காலுக்கு முத்தந் தரும் கொள்கையைக் கொண்ட கும்பலைச் சார்ந்தவரும், தனது தன்மானத்தை விட்டுக் கொடுத்து அரசியல் வாழ்வு நடத்திவரும் "தோழர்" அன்று பேசுகையில் கூட்டத்தின் நோக்கத்திற்கும் கருத்துக்கும் புறம்பான ஆபாச ஆவேச பேச்சுகளைக் கொட்டி அங்கலாய்த் திருக்கிறர்.

"திராவிடகழகத்தின் தலைவர்கள் வகுப்புதுவேஷம் என்ற குறுகிய பிற்போக்கான மனப்பாண்மையைக் கொண்டு பார்ப்பனராய் பிறந்த காரணத்தால் தேசபக்தர்களாயிருந்தாலும் அவர்களைக் கண்டித்து கேவலமாய் பேசுகிறர்கள்" என்று அந்த பார்ப்பன தப்பட்டை பறைசாற்றுகிறது.

எந்த பார்ப்பன தேசபக்தர்களை திராவிடர் கழகத்தவர்கள் குறை கூறியிருக்கின்றனர் என்பதை எடுத்துக் கூறாமல் ஏதேதோ பேசும் அந்த தோழருக்கு ஒன்றை நினைவு படுத்த வேண்டி யிருக்கிறது. அதாவது இதுவரை பார்ப்பன தேசபக்தர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் எவராயிருப்பினும், தங்களின் இனத்தின் ஆதிக்கம் சற்று குறைகிறதென்றல் தேசத் துரோகச் செயல் புரியாமல் இருந்து வருகின்றனரா? குருகுல போராட்டக்காலத்திலிருந்து இன்று வரை கேட்கிறேன் கூறமுடியுமா?

வ. வே. சு. அய்யர் ஒரு பெரும் தேசபக்தர் என்று கூறப்படும் பட்டியலில்சேர்ந்தவர். ஆனல் அவரிடம் தேச விடுதலைக்கு எந்த ஜாதி ஆணவம் வித்தியாசம் கூடாதோ அதுதான் பூரணமாய் குடிகொண்டு இருந்ததென்பதை நமது பிரதமர் ஓமாந்தூராரைக் கேட்டாலே கூறுவார்.

அவர் மட்டுமென்ன காலஞ்சென்ற சீனிவாசய்யங்கார், சத்திய மூர்த்தி அய்யர் ஆகியோர் பெரும் தேசபத்த பட்டந்தாங்கி யிருந்தும் தங்களது இனத்தின் லாபத்தை ஒன்றையே பிரதானமாகக்கருதிய காலங்களில்தேசத் துரோகம் செய்யாம லிருந்தார்கள் என்ருவது கூறமுடியுமா?

இன்று 'கனம்' ஆகவுள்ள ஆச்சாரியாரையே எடுத்துக் கொள்வோம். அவர் பெரும் தேசபக்தர் தான். ஆனல் காங்கிரஸ் தொண்டர்கள் ஆகஸ்டு கலவரத்தின்போது பல தொல்லைகளுக்கு ஆளானபோது ஆகஸ்டு துரோகியாக ஆகிவிடவில்லையா? இன்னும் கூறுவோம். ஜமீன் ஒழிப்பு மசோதாவில் இனும்களையும் சேர்ந்துவிடுவதென்றவுடனே காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு மீறியும் மக்களின் நலனுக்கு மாருகவும் முன்னள் மந்திரி பாஷ்யம் அய்யங்கார், சொக்காய் போடாத அளவு தேசபக்தர் என்று கூறப்படும் வரதாச்சாரியார்களும் வைத்தியநாதர்களும் கூப்பாடு போட்டுவரவில்லையா? கம்யூனிஸ்டு என்று கூறிக்கொண்டாலும் தனது இனத்தின் ஆதிக்கம் குறையக் கூடாதென்பதற்காகசர்வ ஜாக்கிரதையுடன் பார்ப்பனீயத்தைக் கண்டிக்காமல் பிரசாரம் செய்யும் பார்ப்பனர்கள் இல்லையென்று கூறமுடியுமா?

ஆனல் மேற்கூறிய பார்ப்பன நண்பர்கள் மட்டுமல்ல, சட்ட மறுப்பு காலங்களில் சர்க்காருடன் ஒத்துழைத்த பார்ப்பனத் தோழர்களும் சேர்த்து இன்று தேசபக்தர்களாகவும் ஆட்சி பீடந்தாங்கிகளாகவும் இருந்து வரவில்லையா?

அதேசமயத்தில் நாட்டுக்கு உள்ளபடியே உழைத்து கொள்கைக்காக தங்களின் வாழ்வையே தேசத்திற்கு அர்ப்பனஞ் செய்துள்ள பல காங்கிரஸ் திராவிடர்களுக்கு, தமிழர்களுக்கு இன்று நாட்டிலே தேசத்துரோகப்பட்டத்தை மேற் சொன்ன கூட்டத்தினர் சூட்டிவைத்து பத்திரிகைகளிலும் அதற்கேற்ப எழுதிவருவதை நேர்மை புத்தியுள்ள எவராவது மறுக்க முடியுமா?

ஆக பார்ப்பனர்கள் நையாண்டு

வரும் வகுப்பு வெறியை எடுத்துக் கூறுவது பிற்போக்கானத் தன்மை என்று கூறும் இந்த பிரகஸ்பதிக்கு பார்ப்பனர்கள் தேசபத்தி போரால் கையாளும் வகுப்புவெறி எத்தன்மையது என்று அறிந்திருந்தும் அறிவிலி போல் இன்று பிதற்றுவது ஏனே தெரியவில்லை.

வ. வு. சி., இன்று உயிருடன் இருந்திருப்பாரானல் தங்கள் கட்சியில் தான் சேர்ந்திருப்பாரென்றும் பெருமை பேசுகிறது அந்த பித்திக் கொள்ளி.

கப்பலோட்டிய தமிழன் என்று பெருமைப் படுமளவு வாழ்ந்த வ.வு.சி யின் ஆர்வத்தை, உணர்ச்சியைக் கெடுத்தது வடநாட்டு அரசியல் ஆதிக்கமேயாகும். அன்று கப்பலோட்டி வாணிபம் நடத்திய நம் திராவிடம் இன்று தாழ்வடைந்து கப்பல் ஒட்டும் உரிமையையும் அதன்காரணமாகமேல் நாடுகளுக்கு தூதுகோஷ்டியாக செல்லும் நிலையையும் அடைந்திருப்பவர்கள் வடநாட்டு முதலாளித்துவத்தின் சிகரமாயிருந்துவரும் வால்சந்த்ஹீராசந்த்களும், மாஸ்டர்மென்களுமா, அல்லது வ. வு. சி. யின் இனத்தவர்களாகிய தமிழர்களா?

வ. வு. சியின் காலத்திலிருந்து அவரது உணர்ச்சியை பல வகையாலும் பாழாக்கி இன்றளவும் அந்தத் துறையில் நமது திராவிடம் எட்டிப் பார்க்க முடியாத அளவு வடநாட்டாதிக்கம் சதி செய்திருக்க, அந்த சதி செயலுக்கு நம் நாட்டுப் பார்ப்பனீயம் பக்கபலமா யிருந்திருக்க, அதுவும் போதாதென்று அரசியலில் மிக மிக மட்டரகங்களாக விளங்கும் "கம்யூனிஸ்டு" போர்வையை போர்த்துள்ளவர்களின் சரணகதி வேறு துணையிருந்து வருவதை நாட்டினர் மறுக்க முடியுமா?

வ. வு சி. இன்று உயிருடன் இருந்திருந்தால் அவ்வித வடநாட்டு பாசிஸ வெறியர்களின் ஆதிக்கம் விலகவேண்டுமென்று கூறும் திராவிடர் கழகத்தின் கொள்கையை ஏற்பாரா அல்லது பனியா — பார்ப்பனீய அடி வருடிகளான கும்பலின் குழாமில் சேருவாரா என்பதை நேயர்களே யோசித்துத் தீர்ப்பளிக்கட்டும்.

வ. வு. சி. அவர்களின் நண்பர்கள் பெரிதும் பார்ப்பனர்களாம். அவர் தலைவராகக் கொண்டிருந்தவரும் வடநாட்டு திலகர்தானும் எனவே அவரிடம் வகுப்பு வாதமில்லையாம். என்ன தான் தன்மானத்தைப் பலிகொடுத்

திருந்தாலும் இவ்வளவு கோளாறான தன்மையில் அந்த தோழரின் போக்கு காட்சியளிக்கும் என யாரும் நினைத்திருக்க முடியாது.

திராவிடத் தலைவர் பெரியார் ராமசாமி அவர்களுக்கும் ஆக்டிங்வைசிராயாயிருந்த ஆச்சாரியார் அவர்களுக்கும் இன்றளவுங்கூட இருந்துவரும் தனிப்பட்ட நேசம் யாருக்குமே இருந்துவரவில்லையென்பது அனைவரும் அறிந்ததேயாகும். இதனால் இருவரும் ஒரே கொள்கையைத்தான் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்றோ அவ்விதம் கொண்டால்தான் நண்பர்களாகயிருக்கமுடியும் என்றோ கூற முடியுமா?

அதேபோன்று ஒரு காலத்தில் வடநாட்டவராகிய காந்தியாரை அல்லது அவரது கொள்கைகளை தலைமையாக ஏற்று பணியாற்றிய தலைவர் பெரியார் அவர்களுக்கு இன்று காந்தியார்தான் தலைவர் என்று கூறமுடியுமா?

அவ்விதமானால் இந்த பிரகஸ்பதிக்கு அரசியல் அரிச்சுவடி கற்றுக்கொடுத்தது சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியார் ராமசாமி ஆயிற்றே. இன்று ஏன் அக்கொள்கையினை எதிர்த்து பெரியாரின் தலைமையையும் ஒப்புக்கொள்ளாது கண்டவாறு தூற்றுகிறார்?

இன்னும் கூறுவோம் நமது வ. வு. சி.யின் நினைவு நம் தமிழ் நாட்டில் இல்லையே, வடநாட்டு பாசிஸ வெறியர்களைப்பற்றித்தானா நினைவு சின்னங்கள் என்று கூட்டங்களில் பத்திரிகைகளில் தலைவர் பெரியாரும் திராவிடர் கழகத்தினரும் கூறிய பின்னர்தானே நமது காங்கிரஸ் திராவிடர்களிலிருந்து இரண்டுங் கெட்டான் கும்பலைச் சார்ந்துள்ள இந்த அரசியல் பிற்போக்காளர்களுக்கு தெளிவு ஏற்பட்டது. அதுவரை தமிழ் நாட்டிலே சிந்தனை சிற்பி சிங்காரவேலர், கப்பலோட்டிய வீரர் வ. வு. சி. ஏன் திருப்பூர் குமரன் போன்றாரின் நினைவுகள் கூட இல்லாமல்தானே யிருந்து வந்தது என்பதை எவராவது மறுக்கமுடியுமா?

தவிர, இந்நாட்டிலே, பிராம்மண சேவா சங்கம், மார்வாடிகள் சங்கம், இந்துக்கள் சங்கம், ஐரோப்பியர் சங்கம் என்பவைகள் இருந்து வருகின்றன? இவைகள் வகுப்புவாத சங்கங்களாக அந்த பார்ப்பன தப்பட்டைக்கு புரியவில்லை போலும். பார்ப்பனரான ஜோஷியின் பாதந்தாங்கிகளில் ஒருவராயும் தனது தன்மானத்தை அடிக்கடி மறந்து கண்டவாறு பேசிவருபவருக்கு எப்படித் தெரிய முடியும்? தெரிந்திருந்தாலுங்கூட ஜில்லாவுக்கு ஒரு கொள்கை, கூட்டத்திற்கு ஏற்றதைப்போன்ற தகிடுதத்தப் பேச்சுக்களைக் கொண்ட அத்தோழருக்கு நேர்மையான புத்தி எப்படி நீடித்திருக்க முடியும்?

அதுமட்டுமல்ல முஸ்லிம் லீகுக்கு ஒத்து ஊதிய இந்த 'கம்யூனிஸ்டு' பேர்வழிக்கு திராவிடர் கழகம் வகுப்பு துவேஷம் பேசுகிறதென்று முகாரிராகம் பாடுவதின் மர்மம் என்னவோ அறியேன்? வகுப்பு வெறியர்களின் கொடுமைகளையே எடுத்துக் கூறிகிறதேயன்றி திராவிடர் கழகம் வேனுமென்றே எந்த வகுப்பின்மீதும் துவேஷப் பிரசாரம் செய்யவில்லை. இதை இன்று காங்கிரசிலுள்ள பல அறிஞர்களே உணர்ந்து வருகின்றனர்.

அதுமட்டுமல்ல வட நாட்டு கம்யூனிஸ போர்வையில் புகுந்துள்ள பார்ப்பனர்கள் வாய்மூடி வேறு விடயங்கள் பேசிவரும் இன்றைய நிலையில் இந்த உருவம் மட்டும் பார்ப்பன தப்பட்டையாக உபயோகப்பட்டு வருவது ஒரு வகையில் திராவிடர்கள் வருந்தக் கூடியதாகவே யிருக்கிறது.

(9-ஆம் பக்க தொடர்ச்சி)

வம்—சகோதரத்துவம்—விடுதலை இவைகளை நோக்கி விரையும் இளைஞருக்கு இந்த காந்திய திட்டம் தேவையா? அல்லது பெரியாரின் சமதர்ம திட்டம் தேவையா? பொது மக்களே தீர்ப்பு கூறட்டும்.

பிரசார ரகம்-3

நமக்கு தாய்மொழி தமிழ். ஆகவே அதற்கு முதலிடம்தரலாம். எனினும் நாம் ஒரு பொது மொழியை பெற வேண்டாமா? அப்பொழுது தானே இந்திய பாகங்களோடு தொடர்பு கொள்ள முடியும்? இந்திய மக்கள் உலகமக்களோடு சமத்துவமாக வாழத்தான் இதை காந்திஜி வற்புறத்துகிறார் இதை உணராத சிலர் எதிர்க்கிறார்கள்?

அவரவர் வாழும் பகுதிகளில் அந்தந்த மக்களின் தாய் மொழியே கட்டாய பாடமாகவும் அரசியல் மொழியாகவும் இருக்க வேண்டும் என்பது நமது அவா. இந்திய மக்களோடு தொடர்பு கொள்ள ஹிந்தி பொது மொழி ஆவதென்றால் ஏனைய மேல்நாட்டினரோடு தொடர்புகொள்ள ஆங்கிலம் பொது மொழியாக கொள்ளப் பட வேண்டும் அப்படியானால் ஒவ்வொரு பகுதிகளிலும் மூன்று மொழிகளை அவசியம் பயிற்சி பெற்றாக வேண்டும். இது எவ்வளவு கேலிக் கூத்தானது என்பதை நாம் கூறத்தேவையில்லை மனித வர்க்கம் வாழவே மொழி பயன் படவேண்டுமேயொழிய, ஒரு பகுதியாரின் தற்பெருமைக்கல்ல. வடநாட்டினருக்கு ஏனைய இந்திய பகுதிகளில் உள்ள மக்களை அடிமைப்படுத்த இதுபயன்படும். உலக மக்களோடு நாமும் சமத்துவம் பெற வேண்டுமானால் உலகத்திற்கே ஒரு பொது மொழி உண்டாக்கப் படவேண்டும் அதுவரையில் பிற நாடுகளோடு தொடர்பு கொள்ள ஆங்கிலமே பொது மொழியாக விருக்க தகுதியுள்ளது. இதனை நன்கு சிந்திக்கவேண்டும்.

—சென்னை வீரமணி.

குறிப்பு:—முன்பணமின்றி விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டாது.

மூல வியாதிகளுக்கு

"யௌவன பிராஷ்"

(கருணைக் கிழங்கு லேகியம்)

ஆபரேஷன் பயன்தராத. மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு. பவுத்திரக்கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம்.

12 நாள் யௌவன பிராஷ் ரூ. 3.

12 நாள் நாகபஸ்பம் ரூ. 2.

சரஸ்வதி வைத்தியசாலை, பழனி (S.I.

சொல்லும் - செயலும்!

காங்கிரசிலுள்ள ஒரு சில முற்போக்கற்ற பழமை விரும்பிகள் நடைமுறைக்கு ஒத்து வராத காந்தீயத்தை கைவிட மனமின்றி புதுப்புது தத்துவார்த்தங்களைக் கூறி மக்களை மயக்குகிறார்கள். 100-க்கு 90 பேரும் திராவிட மக்களில் கல்வி கேள்வியற்றுக் கிடந்த காலத்தில் ஏய்த்து வந்ததைப் போல் இனியும் இந்த பித்தலாட்ட பிரசாரத்தை நம்பி பின்பற்றுவர் என எண்ணி ஏய்த்து வருவது வீண்வேலை. அது பயனளிக்காது. இதை காந்தியாரே ஒப்புக் கொண்டுள்ளார், காந்தீய சீடர்களே அதை சரிவர பின்பற்றாத காரணத்தால். என்றாலும் ஒரு சில பழமை விரும்பிகள் இன்னும் பிடிவாதமாக பேசுகின்றனர். அத்தகையோருக்கு நாம் பதில் தரவேண்டிய அவசியமில்லையானாலும் இதனால் பாதிக்கப்படும் மக்கள் திராவிடர்களாதலால் அத்தகைய விஷமப்பிரசாரங்களுக்கு நாம் அடிக்கடி விளக்கம் தர கடமைப்பட்டுள்ளோம்.

பிரசார ரகம்—1

> தான் சொல்லுவதை செயலில் நிரூபிக்கிறார் காந்திஜி. இந்த திராவிட கழகத்தினர் வெரும் வாய்ப்பேச்சு வீரர்கள்தான். இவர்களால் என்ன ஆகும்?

எழுத்தாணிகாலத்திற்கு ஏவும் பணியை ஏற்றுள்ள காந்தியார், தான் சொல்வதை செயலில் நிரூபிப்பாராம். நம்மால் இயலாதாம். திராவிடர் கழகத்தார் கூறிவரும் திட்டங்களை ஒவ்வொன்றாக காங்கிரசார் இன்றைய நிலையில் பின்பற்றிவரும் செயலொன்றையே அறிவுடையோர் நோக்கினால் போதும். திராவிட கழகத்தினரும் தங்கள் ஆட்சி ஏற்பட்டால் சோறு மழையை உண்டாக்குவோம் என்று மக்களிடம் புளுகி ஆதரவு பெற்றால் நடைமுறையில் செய்வதற்கு அதிசீக்கிரத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெறமுடியும். நாட்டுக்கு தேவையானதை நாம் சொல்லுகிறோம், அதை அரசியலார் பின்பற்றியே தீருவர் என்ற எண்ணத்தால். வீண் வேலை என்று எவரும் கூறத்துணியார். ஆனால் காந்தியார் சொன்ன திட்டங்களை நடைமுறையில் பிறர் பின்பற்றுவர், பின்பற்றுகிறார்கள் என்றோ கூறமுடியாது. அதை விளக்கி எத்தனையோ முறை நமது திராவிடர் கழக ஏடுகள் கட்டுரைகள் தீட்டியுள்ளன. காந்தியார் பல சந்தர்ப்பங்களில் வழிபாட்டுக் கூட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் "ராம்துன்" அதாவது இராம நாம பஜனையை எவனொருவன் பஜிக்கிறானோ அவனை எப்பிணியும் அணுகாது என்று கூறியுள்ளார். இதை அவர் எப்பொழுதாவது நிரூபித்தாரா? நிரூபிக்க முடியுமா இனியாகிலும்?

இவருக்கு எத்தனை முறை பிணி அதாவது காய்ச்சல், விஷக் காய்ச்சல் இன்ன பிற நோய்கள் கண்டு எத்தனை டாக்டர்கள் அதுவும் மேல் நாட்டு வைத்திய முறை பயின்ற டாக்டர்கள் தேவைப்பட்டார்கள் என்பதை பத்திரிகை படிக்கும் யாராவது மறக்க முடியுமா? ராம்துன் பஜனை பயனளிக்காத மர்மமென்ன? இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த பித்தலாட்டம் செல்லுபடியாகும். இதுதான் சொல்வதை செயலில் காட்டுவதென்பதா?

பிரசார ரகம்—2

> காந்தீயத்தின் பெருமையை உணராத திராவிடர் கழகத்தார், அது மக்களுக்கு தீங்கு தரும் என்று கூறுகின்றனர். உலகம் போற்றும் உத்தமராம் காந்தியின் திட்டங்களை இதுகள் குறைகூறி ஆவதென்ன?

பொருளாதாரத்தைப் பற்றி காந்தீயம் கூறும் தத்துவார்த்தங்களை சுருங்கச் சொன்னால் முதலாளிகளின் மனம் புண்படாமல், மெள்ள மெள்ள, கொஞ்சம் கொஞ்சமாக, சமாதான முறையில் வேலை நிறுத்தம் போன்ற சச்சரவின்றி பாட்டாளிகள் தன் தேவையை — உரிமைகளை பெறவேண்டும் என்பதாகும். இது முடியுமா? முடிந்ததா? இதை முற்போக்குள்ள காங்கிரஸ் இளைஞர்களே கூறுவரே.

சமூக விஷயங்களைப் பற்றி காந்தீயத்தின் கருத்தென்ன வென்பது இன்னும் அநேகருக்கு, அதிலும காங்கிரசாருக்கே புதிராக வுள்ளது. அதை பெரியார் ஒருவரே அடிக்கடி அம்பலப்படுத்தி வருகிறார். ஆனால் கட்சி கண்ணாடிகொண்டு நோக்கும் காங்கிரசிலுள்ள இளைஞர்கள் மாற்றுக் கட்சியானதால் இப்படி கூறுகிறார்கள் என்பார்கள். அன்றொரு நாள் தனது "யங் இந்தியா" பத்திரிகையில் காந்தியார் தீட்டியுள்ள சில வாசகங்களை படித்து விட்டு பேசட்டும் அப்படிப்பட்ட அன்பர்கள். இதோ அவைகள்:—

"தட்சண யாத்திரையின் போது நான் ஜாதிபாகு பாட்டைப் பற்றி பேசியதைக் கண்டு சிலர் கோபங் கொண்டு எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்த கடிதங்களை நான் பிரசுரிக்காமைக்குக் காரணம் அவைகளில் வசைச் சொற்கள் மலிந்து இருப்பதுதான். இந்த கடிதங்களில் கண்டுள்ள வாதம் என்னவென்றால் ஜாதிபாகுபாடே இந்திய நாட்டை நாசம் செய்துவிட்டதென்பதும், ஜாதி பாகுபாடே இந்தியாவை அடிமைப் படுத்தியதென்பதுமாகும். ஆனால் எனது கருத்து, நமது இந்திய நிலைமைக்குக் காரணம் ஜாதியல்ல என்பதே. இந்து மதத்தை அழிந்துபோக விடாமல் காப்பாற்றியது ஜாதித் திட்டம்தான் என்று நான் நம்புகிறேன். மக்களை நான்கு வகையாக பிரிக்கும் பாகுபாடுதான் இயற்கைக்கு பொருத்தமானதும், அவசியமானது மாகும். இந்த அடிப்படையான பாகுபாட்டை மாற்றுவதற்கு செய்யப்படும் எந்த முயற்சியையும் உறுதியாக எதிர்ப்பேன். ஜாதி அமைப்பில் உயர்வு தாழ்வு இல்லை. மனித குணங்கள் பரம்பரையை யொட்டி வருவது இயற்கையில் ஏற்பட்ட மாற்றமுடியாத சட்டம். அந்த சட்டத்தை மாற்றுவதற்கு செய்யப்படும் எந்த முயற்சியும் வீண் குழப்பத்திலேயே கொண்டு போய்விடும். இந்துக்கள் மறுபிறப்பில் நம்பிக்கை வைத்தாக வேண்டும். ஆத்மா ஒரு கூட்டிலிருந்து மற்றொரு கூட்டிற்கு பாய்கிறதென்னும் கொள்கையையும் நம்பியாக வேண்டும். அப்படி அவர்கள் நம்புவார்களானால் இயற்கை செலுத்தும் ஞாய அமுலில் ஒரு பிராமணன் இப்பிறப்பில் ஒரு குற்றம் செய்தானேயானால் மறுபிறப்பில் அவனை கீழ்ஜாதியில் பிறக்கும்படியும், இந்த ஜென்மத்தில் உத்தம பிராமணன் தர்மத்தை கைப்பிடிக்கும் ஒரு கீழ்ஜாதியான் அடுத்த ஜென்மத்தில் பிராமணனாக பிறக்கும்படியும் ஏற்படுகிறது. இந்துக்களை நான்கு வகையாக பிரித்து வைக்கும் ஜாதி பாகுபாட்டை நான் எப்பொழுதும பாதுகாத்து வருகின்றேன். இனியும் பாதுகாக்க தயார இருக்கின்றேன். ஜாதி பாகுபாட்டில் அமைந்துள்ள கொள்கை எவனையும் தான்உயர்ந்த பிறப்புடையவன் என்று கர்வமடைய செய்யவில்லை. ஒவ்வொருவரும் அவனுடைய சக்திக்கு தகுந்தபடி மேன்மையடைய வழிகாட்டுகிறது. சமூகத்தை நிலை நிறுத்தவும் மேன்மையடையச் செய்யவும் ஜாதித் திட்டமே தகுந்த சாதனம். குணங்கள் பரம்பரையை ஒட்டி வருகின்றன என்ற கொள்கையை அது பின்பற்றுகிறது. ஒவ்வொருவரும் மேன்மையடைய அது வழி காட்டியே. ஆதலால் முன்னேற்றத்தைக்கருதி ஜாதியாச்சாரத்தைகைவிட்டவர்கூட ஜாதிகட்டுப் பாட்டுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்பதில் அநியாயம் ஒன்றுமில்லை. ஜாதியமைப்பில் தானாகவே ஒரு ஏற்றத் தாழ்வு ஏற்பட்டு விட்டதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனால் அவ்வித ஏற்றத் தாழ்வை பிராமணர்கள் உண்டாக்கினார்கள் என்று சொல்லுவது தவறு. வாழ்க்கையின் உன்னத நோக்கம் ஒன்றே என்று எல்லா ஜாதியாரும் ஒப்புக்கொள்ளுவதால் இந்தவித ஏற்றத் தாழ்வு ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை. ஏனெனில் அந்த நோக்கத்தை எல்லா ஜாதியாரும் ஒரே அளவில் அடைய முடியாது."

பார்ப்பனீயத்தின் பாதுகாவலர் காந்தியார் என்றால் கோபங் கொள்ளும் காங்கிரஸ் தோழர்கள் இதனை மறுபடியும் ஒரு முறை படிக்க வேண்டுகிறேன். சமத்து

(8-ம் பக்கம் பார்க்க)

வீராங்கனை

(இரே. சம்புநாதன்.)

முன் இதழில்:

[சோழர் தளபதி மணிவண்ணன் செருக்குற்ற சேர மன்னனை போரில் வென்று வெற்றியின் மகிழ்ச்சியிலே தன் காதலி வஞ்சியுடன் கொஞ்சிக் கொண்டிருந்த நேரத்தில், மறுபடியும் திடீரென சேரமன்னன் பெரும் படை பலத்துடன் சோழநாட்டில் பிரவேசிக்கிருன். இதைச் சற்றும் எதிர்பாராத சோழ மன்னனும் தளபதியும் மிக விரைவாக அரச சபையைக் கூட்டி ஆலோசிக்கின்றனர். தளபதி மணிவண்ணன் தன் உயிர் உள்ளவரையிலும் சோழ நாடு சோர்கைச்சேருது என சூள் உரைத்து போருக்குச் சித்தமாகிருன். அதே நேரத்தில் சேரர் படை வீட்டிலும் சதியாலோசனை நடைபெறுகிறது.]

சேர அரசன்:— கடந்தபோரிலே நமது படைகள் நன்ருகவே போர் புரிந்தன. இருந்தும் நாம் தோல்வியுற்ருேம் காரணம் எதிரிகளின் படைத்தலைவன்தான். அவன் மிகவும் சமர்த்தியக்காரன். முதலிலே தைரியத்தைக் கைவிடாமல் அவனை ஒழித்துக்கட்டுங்கள். பிறகு வெற்றி நிச்சயமாக நமக்குத்தான். அவனுடைய திறமையாலும் தந்திரத்தாலும் தான் முன்பு சோழர்கள் வெற்றி கண்டனர்.

புலிகேசி:— அப்படியே செய்கிறேன் அரசே!

சே. அரசன்:—கதிரவன் எழுமுன்னே தாக்குதல் ஆரம்பம் ஆகட்டும்.

புலிகேசி:—வணக்கம் விடை பெற்றுக் கொள்கிறேன்.

[கடலைப்போல திரண்டெழுந்த இரண்டு படைகளும் ஒன்ருேடொன்று மோதுகின்றன. பயங்கரமான போர், தலைகள் பறந்து கீழே விழுகின்றன வெட்டுண்ட உடலிருந்து குறுதிபீறிட்டெழுகிறது. இரத்த வெள்ளத்திலே செம்பரிதியின் கதிர்கள்பாய்வது பார்க்கவும் பயங்கரத்தோற்றமளிக்கிறது. போரிரைச்சல் முழுதும் எரிமலையென ஒலிக்கின்றது கொஞ்சு மொழியாளுடன் குலவிமகிழ்கின்ற நேரத்தில் குமுறுகின்ற வீரத்தைக்கொட்டுகின்றனர் வீரர்கள். வெற்றியாருக்கு தோல்வி யாருக்கு என நிச்சயிக்க யுத்த நிபுணர்களாலும் முடியாது. முடியவில்லை. புலிக்குணம் கொண்ட மணிவண்ணன் வெற்றிப் புன்னகையுடன் வீழ்த்துகின்ருன் தலைகளை. நரிக்குணமே உருவான புலிகேசி பின்புறமாக மணிவண்ணனை நெருங்குகின்ருன். எதிரிலே வருவோருக்கு வாளால் பதில் கொடுக்கும் வீரனுக்கு பின்புறமாக வஞ்சகன் வீசிய வேல் எப்படித் தெரியும். வேல் வருகிறது. ஆ......... பாய்ந்து விட்டது கழுத்தில். அடியற்ற மரம் போல் வீழ்ந்தான் மணிவண்ணன் "வஞ்சகத்தின் முன் வீரம் தோற்றது" பேடி பின்புறமிருந்து தாக்கினுன் என்றது மெதுவாக அவன் வாய். வஞ்சி என்ற கடைசி சொல்லோடு உயிர் அகன்றது. இச்செய்தி இரண்டு படை வீடுகளுக்கும் பறக்கிறது]

சே. அரசன்:—தொலைந்தானு பாதகன் இனி நமக்குத்தான் வெற்றி. போரிடுங்கள். விடாதீர்கள்.

[அதே நேரத்தில் சோழர் படை வீட்டைக் காண்போம்]

சோழ அரசன்:—ஹா! தளபதி இறந்தாரா? வஞ்சகர்கள் சூழ்ச்சிக்கு பலியாகி விட்டாரா? வீரத்தின் உவமை மறைந்து விட்டதா? இனியாரை நம்பி வெற்றி நமதென்று சொல்வது.

[இதையறியாத வஞ்சி அந்தப் புறத்திலே தோழிகளுடன் பேசிக் கொண்டிருக்கிருள்]

வஞ்சி:—என்னடி தோழி வெற்றி நம் மன்னருக்கு கிடைக்குமா?

தோழி:—அதிலென்னம்மா சந்தேகம். அதிலும் தங்கள் நாயகர் படைத்தலைவராக இருக்கும் பொழுது சந்தேகம் வேறு?

[மணிவண்ணன் போரிலே இறந்ததைத் தெரிவிக்க ஓர் போர் வீரன் வருகிருன்]

வஞ்சி:—யாரடி அதோ போர் வீரன் மாதிரி இருக்கிறது.

போர் வீரன்:—அம்மணி தங்கள் கணவர்

வஞ்சி:—வெற்றியடைந்து விட்டதாக சொல்லச் சொன்னுரா?

போ. வீ:—இல்லை...இ...ற...ந்...து.. வி...ட்...டா...ர்.

வஞ்சி:—ஹா! இறந்தாரா? என் வாழ்வின் ஒளி அணைந்து விட்டதா? என்னை மறந்து சென்ருரே! என் கணவர் எதிரியிடமா? தோற்றுப் போனுர்.

போ. வீ:—தோற்கவில்லை. எதிரிகளின் தளபதி பின்புறமாக தாக்கிவிட்டார்.

வஞ்சி:—எதிரிலே நின்று போர்புரிய சக்தியற்ற அந்தத் தளபதி யார்? தமிழனு?

வீரன்:—ஆம், தமிழன்தான்.

வஞ்சி:—என்ன தமிழனு...உண்மையிலேயே தமிழனு. வெட்கம் வெட்கம் தமிழர்களின் ஒப்புயர்வற்ற வீரத்திற்கே கறை எற்படுத்தி விட்டானே. எதிர் காலத்திலே இதைக் கேள்விப் படுபவர்கள் எள்ளி நகையாடுவார்களே. சரி நீ போ. நான் அவனைப் போர்க்களத்திலே சந்திக்கின்றேன்.

தோழி:—போர்க்களத்திற்கா? வேண்டாம்

வஞ்சி:—போடி பேதையே. பெண்களுக்கும் வீரம் உண்டு என்பதை காண்பிக்கின்றேன். பழிக்குப்பழி வாங்கியே தீருவேன். இறந்தாலும வீராங்கனையாக மாள்வேன்.

[போர்க்களம் நோக்கிப் புறப்பட்டு விட்டாள் வஞ்சி. போகிற உறுதியைப் பார்த்தால் வஞ்சி வஞ்சம் தீர்ப்பாள் என்றே கருத வேண்டி யிருக்கிறது. படைக்களத்திலே கண்கள் நான்கு புறமும் சுற்றுகின்றன. அதோ கண்டு விட்டாள் பாய்கின்ருள். அத்திசையை நோக்கி]

வஞ்சி:—பின்புறமிருந்து தாக்கிய பேடியே நீர்தான் சேரர் தளபதியோ?

புலிகேசி:—யாரது? என்ன ஆணவம் பெண்ணுனதால் தப்பினுய் மாரியாதையாகப்பேசு.

வஞ்சி:—நியாயம்கூட உமக்குத் தெரியுமா? நன்ரு உம்மிடம் நியாயம் கேட்க வரவில்லை நாயகனுக்காக வஞ்சம் தீர்க்க வந்துள்ளேன். தயாராகுக போருக்கு.

புலிகேசி:—அடிபேதையே ரோபருக்கா இதோ உன் தலை பறக்கிறது பார்.

[கிணீர் கிணீர் என்ற ஓசையை வாளுடன் வாள் மோதிகிளப்பிற்று. ஒரு உருவம் கடமைக்கும் மற்ருெரு உருவம் வஞ்சம் தீர்க்கவும் போரிட்டன. இறுதியில் வஞ்சியின் வாள் புலிகேசியின் மார்பைப்பிளந்து சென்றது.]

இதைக்கண்டதும் வஞ்சி பயங்கரமாக சிரித்தாள். இதை தன் கணவனிடம் தெரிவிக்க வேண்டி வாளை வானத்தில் எறிந்து மார்பில் தாங்கி உயிர் துறந்தாள் இச் செய்தியறிந்த சோழ மன்னன்:

சோ. மன்னன்:—மணிவண்ணன் மனைவியா? இன்று நம் நாடு ஒரு வீரனையும் வீராங்கனையும் இழந்தது ஆஹா! அவளுடைய வீரம்தான என்ன! என ஆற்ருது அழுது தான் பயன் ஏ! தமிழகமே இனியும் இந்நாடு இம்மாதிரியான வீராங்கனைகளைத் தருமா? காதலுக்காக காதலனுக்காக நாட்டிற்காக உயிர்துறந்த வீராங்கனைக்கு வணக்கம் செலுத்துவோம். முடிவு.

கோலார் சுரங்க விபத்து

கோலார் சுரங்க பாறை வெடி விபத்தில் சிக்கிய சுரங்க எஞ்சினீயர் காப்டன் பாட்டர்ஸன், மற்றும் 9 பேர் ஆகியவர்களின் கதி என்ன ஆயிற்று என்பது இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை. அவர்கள் உயிரோடு இருக்கக்கூடும் என்ற நம்பிக்கை முற்றிலும் கைவிடப்பட்டுவிட்டது.

Edited and Published by N. V, Natarajan, at Dravidan Office, 6, Sunkurama Chetty St., Madras and Printed by T. M. Parthasarathy, at Mercantile Press, No. 2/45, Muthumari Chetty St., Mannady, G. T. Madras